சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – தகுதி பெற்ற ஆண்/பெண் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சமூக நலத் துறையில் மேற்பார்வையாளர் நிலை–2, பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடம் வழங்குதல் – திருத்தம் – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை

அரசாணை (நிலை) எண்.45

நாள் 28.04.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, சித்திரை 15

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.12, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 12.01.2010.
2. அரசாணை (நிலை) எண்.37, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 28.02.2011.
3. அரசு கடித (ப) எண்.115, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–2) துறை, நாள் 25.04.2025.

------

ஆணை:–

சத்துணவு / குழந்தைகள் மையப் பணியாளர்கள் 21.11.2009 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பின்வருமாறு ஆணையிடப்பட்டது:–

**"3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை சமூக நலத் துறையில் பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர்களாக பணி நியமனமும், தகுதி பெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை – 2 பணியிடத்தில் பதவி உயர்வும் வழங்க அரசு ஆணையிடுகிறது.**

**4. தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் பதிவுரு எழுத்தராக பதவி உயர்வு பெற அலுவலக உதவியாளராக பணி புரிந்திருக்க வேண்டிய விதி உள்ளதால், அலுவலக உதவியாளராக பணிபுரிந்த சத்துணவு அமைப்பாளர்களை காலிப்பணியிடங்கள் ஏற்படும் போது, மாநில முதுநிலை வரிசை அடிப்படையில் பதிவுரு எழுத்தராக பதவி உயர்வு வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது."**

த.பி.பா,

2. இந்நிலையில், மேற்காணும் அரசாணையில் சில முரண்பாடுகள் உள்ளதாக சத்துணவுப் பணியாளர்கள் / அங்கன்வாடிப் பணியாளர்கள் சங்கத்திலிருந்து பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், அம்முரண்பாடுகளைக் களைய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் முதன்மைச் செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையிலும், தற்போது நடைமுறையிலுள்ள பணி விதிகளின்படியும் அரசு ஆய்வு செய்து, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி–3 மற்றும் 4–க்குப் பதிலாக, பின்வரும் திருத்தம் வெளியிடப்படுகிறது: –

<u>திருத்தம்</u>

i. **தகுதி பெற்ற ஆண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு** சமூக நலத் துறையில் அலுவலக உதவியாளர்களாக பணி நியமனமும், தகுதி பெற்ற பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை – 2 பணியிடத்தில் பணி நியமனமும் வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

ii. தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிகளுக்கான விதிகளின்படி, பதிவுரு எழுத்தராக பதவி உயர்வு பெற, அலுவலக உதவியாளராக பணி புரிந்திருக்க வேண்டுமென்பதால், அலுவலக உதவியாளராக பணிபுரிந்த **ஆண் சத்துணவு அமைப்பாளர்களை** காலிப்பணியிடங்கள் ஏற்படும் போது, மாநில முதுநிலை வரிசை அடிப்படையில் பதிவுரு எழுத்தராக பதவி உயர்வு வழங்கலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை–5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (சமூக நல ஆணையர் வழியாக)
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள். (சமூக நல ஆணையர் வழியாக)

நகல்
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலன் – மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை–9.
நிதித் (ச.ந.)/(வ.செ.பொது–I/II/ வ.வ.–I/மை.ம.ஆ.பி) துறை,
சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்(சந–1/சந–7) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/04/2025

பிரிவு அலுவலர்

28/4/25